# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP II & IIA
# UNIT - III

## சமூக நலனில் NGO-வின் பங்கு (Role of NGO's)

1. **சமூக மேம்பாட்டிற்கு அரசு சாரா அமைப்பின் பங்கினை திறனாய்வு செய்க.**
   - ✓ தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக அக்கறை மற்றும் சமூக நீதிக்காக செயல்படும் தன்னார்வ நிறுவனங்கள். அவர்கள் மக்களின் சமூகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளனர். சமூக மேம்பாட்டிற்கான வறுமை ஒழிப்பு, சாதிவெறி மற்றும் பாகுபாடு ஒழித்தல், பெண்கள் உரிமைகள் பேணுதல், குழந்தைத் தொழிலாளர்கள் ஒழிப்பு, கிராமப்புற மேம்பாடு, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் போன்ற குறிப்பிட்ட பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு அரசாங்கத்தின் ஆதரவுடன் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அதன் வளர்ச்சி நடவடிக்கைகளை துரிதப்படுத்தி வருகின்றன. கடந்த இரண்டு தசாப்தங்களில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பங்கு சமூகத் துறை மேம்பாடுகல்வி, சுகாதாரம் போன்றவற்றில் குறிப்பிடத்தக்கதாகிறது.

**சமூக மேம்பாட்டில் தொண்டு நிறுவனங்களின் (NGO's) பங்கு:**

- ✓ **சமூக மேம்பாடு:** சமூக மாற்றம் மற்றும் வளர்ச்சியைக் கொண்டுவருவதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மகத்தான பங்கைக் கொண்டுள்ளன. என்ஜிஓக்கள் மக்களின் சமமான பங்களிப்பை உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்கின்றன. கல்வி மற்றும் ஊக்கபடுத்தல் மூலம் மக்கள் தங்கள் உரிமைகளுக்காகப் பெறுவதற்காக NGO's முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.
- ✓ **கல்வி:** தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கல்வியை மேம்படுத்துவதில் தீவிரமாக செயல்படுகின்றன, குறிப்பாக மக்கள்தொகையில் நலிந்த பிரிவினரிடையே. பெண்கள் மற்றும் பிற தாழ்த்தப்பட்ட மக்கள், குறிப்பாக எஸ்சி மற்றும் எஸ்டிகளின் கல்வியை மேம்படித்துவது அவர்களின் நோக்கமாக உள்ளது.
- ✓ **பெண்களுக்கு அதிகாரமளித்தல்:** பெண்கள் சமூகத்தின் பிற பாதிக்கப்படக்கூடிய பிரிவினர். அதிகமான பெண்கள் தங்கள் உரிமைகளுக்காக உழைத்து சமூகத் துறையில் தங்களைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்கிறார்கள். இந்த செயல்பாட்டில் அரசு சாரா நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. சேவா, சத்தின், ஏக்லவ்யா, திஷா போன்ற ஆயிரக்கணக்கான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலமும், பெண்கள் தொடர்பான தலையீடுகளாலும் வளர்ச்சியில் தங்கள் பங்கிற்கு பெயர் பெற்றவை.
- ✓ **சுற்றுச்சூழல் விழிப்புணர்வு:** சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் இயற்கை வளங்கள் குறைவதால் மனித வாழ்க்கை அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது. இங்கு, அரசு சாரா அமைப்புகளின் பணி கவனிக்கத்தக்கது மற்றும் பாராட்டத்தக்கது. ஆயிரக்கணக்கான தன்னார்வ நிறுவனங்கள் சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் வளங்களின் குறைவுக்கு எதிராக மக்களையும் அரசாங்கங்களையும் எச்சரித்து சுற்றுசூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்கின்றன. எ.கா. வனசக்தி NGO.
- ✓ **மறுசீரமைப்பு:** வளர்ச்சி திட்டங்களான அணைகள் கட்டுதல், சாலை நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில்வே போன்ற திட்டங்களால் சில பகுதி மக்கள் பாதிக்கப்படுகின்றனர், குறிப்பாக கிராமப்புறங்களில் சரியான இழப்பீடு வழங்கப்படாமல் மக்கள் இத்தகைய நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ளனர். அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களின் மீள்குடியேற்றத்திற்கான முக்கியப் பங்காற்றுவதுடன், இந்நடவடிக்கைகள் மூலம் பாராட்டத்தக்க பணிகளைச் செய்துவருகின்றன.

- ✓ **கண்ணியத்தைப் பாதுகாத்தல்:** தாழ்த்தப்பட்ட மற்றும் பாகுபாடு காட்டப்பட்ட பிரிவினரின் கண்ணியத்தை மீட்டெடுப்பதில் தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் பெரும் சேவையை ஆற்றி வருகின்றன. உதாரணமாக, பாலின பாகுபாடு, இன மற்றும் மத பாகுபாடுகளால் பாதிக்கப்பட்ட பெண்களைப் பாதுகாப்பதன் மூலம் பெண்களின் கண்ணியத்தைப் பாதுகாத்தல்.
- ✓ **மனித உரிமைகள் பாதுகாப்பு:** இந்தியாவில் மனித உரிமைகள் மற்றும் பொது விழிப்புணர்வுக்கு என்ஜிஓக்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, ஓரினச்சேர்க்கையாளர்கள் மற்றும் திருநங்கைகளின் உரிமைகளை அங்கீகரிப்பது என்பது சிவில் சமூக அமைப்புகளின் தொடர்ச்சியான முயற்சி இல்லாமல் நடந்திருக்கமுடியாது.

**2. அரசு சாரா நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை விவரித்து, அதன் திறனை மேம்படுத்துவதற்கான வழிகளை பரிந்துரைக்க.**

- ✓ **நிதியைப் பெறுவதில் உள்ள சிரமங்கள்:** பெரும்பான்மையான தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்கள் வேலையைச் செய்வதற்கு போதுமான அளவு மற்றும் தொடர்ச்சியான நிதியைப் பெறுவதில் சிரமங்களை அனுபவித்துள்ளன. நன்கொடையாளர்களைப் பெறுவது கடினமான பணியாகும், சில சமயங்களில் சில குறிப்பிட்ட நன்கொடையாளர்களின் நிதி நிர்வாக விதிகளை கையாள்வது அரசு சாரா அமைப்புகளுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கலாம்.
- ✓ **அதிகப்படியான கட்டுப்பாடுகள்:** அரசியல்வாதிகளின் வாக்கு வங்கியை பாதிக்கும் அரசு சாரா அமைப்புகளின் எண்ணங்கள் மற்றும் பணியைத் தடுக்க அரசாங்க விதிமுறைகள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. அரசியல்வாதிகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை நிதியை அகற்றவோ அல்லது அவர்களின் தொண்டு செய்வதற்கான அங்கீகாரத்தை பறிப்போம் என அச்சுறுத்துகின்றனர். தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் அதிகப்படியான கட்டுப்பாடு அவர்களின் பணி மற்றும் செயல்திறனைத் தடுக்கிறது.
- ✓ **கலாச்சார தடைகள்:** பல நூற்றாண்டுகள் பழமையான பாரம்பரியம் மற்றும் மக்களின் கலாச்சாரத்தை ஒழிப்பதாக அரசு சாரா நிறுவனங்கள் சில தருணங்களில் செயல்படுகின்றன.. PETA தொடுத்த பொதுநல வழக்குக்கு பிறகு ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தது ஒரு உதாரணம். மேலும் சில நேரங்களில் இது போன்ற நடவடிக்கைகள் வெகுஜன எதிர்ப்புக்கு வழிவகுக்கும்
- ✓ **சரியான கூட்டு நடவடிக்கை இல்லாமை:** சில NGO களுக்கு, நெட்வொர்க்குகளை உருவாக்குவது கடினம். மோசமான நெட்வொர்க் இருப்பதால், தகவல்தொடர்பு பற்றாக்குறை ஏற்படுகிறது. மோசமான நெட்வொர்க்குகள் சமூகத்துடன் பணிபுரியும் வாய்ப்பை இழக்க வழிவகுக்கும் மற்றும் அவர்களின் பங்கேற்பு மற்றும் NGO களின் செயல்திறனை பாதிக்கிறது.
- ✓ **நிர்வாக திறனின்மை:** பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு நிர்வாகத்திற்கான வாரியம் இல்லை. அதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு ஊதியம் வழங்காமல் அல்லது அவர்களுக்கு சில சலுகைகளை வழங்காமல் இருப்பதால் திறமை வாய்ந்த நிர்வாக உறுப்பினர்களை கவருவதில் சிரமம் ஏற்படுகிறது. பெரும்பாலும் திறமை வாய்ந்த நிர்வாக உறுப்பினர்கள் இல்லாததால் NGO தன் பணியில் தவறான வழியில் மற்றும் திறமையின்மையுடன் செயல்படுகிறது.

**NGO's சிறப்பாக செயல்பட பரிந்துரைகள்:**

- ✓ **கண்காணிப்பு:** சட்டவிரோத மற்றும் கணக்கில் வராத நிதிகளைக் கண்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் உள்துறை மற்றும் நிதி அமைச்சகங்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குறிப்பாக கிராமப்புறங்களில் வளர்ச்சிக்கான வாகனங்களாகும்.

- ✓ **பங்கேற்பு:** இன்று குடிமக்கள் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்தும் செயலில் தீவிரமாக பங்கு வகிக்க ஆர்வமாக உள்ளனர். ஜனநாயகத்தில் அவர்கள் வாக்களிப்பது மட்டுமல்லாமல் இதர சமூக நடவடிக்கைகளான தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் பணிபுரியும் போது சமூக நீதி, பாலின சமத்துவம், உள்ளடக்கிய வளர்ச்ஷி போன்றவற்றை மேம்படுத்துவதுகிறது.
- ✓ **நிர்வாகத்தை மேம்படுத்துதல்:** தன்னார்வ தொண்டு நிறுவனங்களை நிர்வகிப்பதற்கான ஒரு குழுவை வைத்திருப்பது, நல்ல நிர்வாகத்தை அடைவதற்கான சிறந்த வழிகளில் ஒன்றாகும். திறன் மேம்பாடு மற்றும் பயிற்சியானது முக்கியமான புதிய திறன்களை வழங்க உதவும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கலாம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திலுள்ள சவால்களை எதிர்கொள்ள நிறுவனத்திற்குள் தேவையான திறன்களை வளர்க்கலாம்.
- ✓ **நிதியுதவி:** கூட்டாளர்களுடன் நல்ல உறவைப் பேணுவது ஒரு நிறுவனம் வளர உதவியாக இருக்கும். சொத்துக்களைக் கொண்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் வருமானத்தை ஈட்டுவதற்கு எந்த உபரி வருவாயை பயன்படுத்தலாம். கட்டிடங்களை வாடகைக்கு விடுதல், பயிற்சி வழங்குதல், ஆலோசனை வழங்குதல், பொருட்களை உருவாக்கி விற்பனை செய்தல் மற்றும் அவற்றின் பெயரில் வர்த்தகம் செய்தல் போன்றவை நிறுவன வருவாயை அதிகரிக்கும்.
- ✓ **கலாச்சார விழிப்புணர்வு:** தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளூர் கலாச்சாரங்களை அறிய முயற்சிக்க வேண்டும் மற்றும் சமூகங்களுடன் இணக்கமாக செயல்பட வேண்டும். எந்தவொரு பாரபட்சமான சமூக நடைமுறைகளையும் மக்களுக்கு உணர்த்தி, மக்களுக்கு எதிராகச் செல்வதை விட அவர்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.
- ✓ அரசு சாரா நிறுவனங்கள் பல சவால்களை எதிர்கொள்கின்றன. ஒரு நிறுவனம் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களை அடையாளம் காண்பது மற்றும் மேம்படுத்துவதற்கு வழி வகைகளை உருவாக்குவதே நிறுவனத்தின் கடமையாகும். இந்த முக்கிய பகுதிகளை அடையாளம் கண்ட பிறகு, நிறுவனங்கள் தாங்கள் எதிர்கொள்ளும் தடைகளை மேம்படுத்தவும் சமாளிக்கவும் ஒரு திட்டத்தை வடிவமைக்க முடியும்.